Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 169
திங்கட்கிழமை
13 மே 2024
சித்திரை 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"உந்தக் காக்கிச்சட்டைக்காரருக்கு தீபமேத்துறது தான் பிடிக்கேலையென்டால் கஞ்சி ஊத்திறதும் பிடிக்கேலையோ?"

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# நீதிமன்றத் தடையுத்தரவைக் காண்பித்து தடையேற்படுத்த முயன்ற பொலிஸார்

## மக்கள் முரண்பட்டதால் பதற்றம்

## நேற்றிரவு ஒருவர் கைது

திருகோணமலை, மே 13

சம்பூர் பொலிஸ் பிரிவில் உள்ள சேனையூரில், பொதுமக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தபோது சம்பூர் பொலிஸார் அங்கு சென்று நீதிமன்ற தடையுத்தரவைக் காண்பித்து தடுக்க முற்பட்டுள்ளனர்.

11



முள்ளிவாய்க்கால் நினைவுகள்...

# தமிழாராய்ச்சி நினைவுத்தூபியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

## நினைவு ஊர்தி நகரில் பவனி

யாழ்ப்பாணம், மே 13

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரவாதம் சரவணபவனின் ஏற்பாட்டில் வட்டுக் கோட்டைத் தொகுதிக் கிளையால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் நேற்றுக்காலை 9.30 மணியளவில் உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

11




# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் தாயகத்தில் நேற்று பல இடங்களில்

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழர் தாயகத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி

11

# குமுதினிப் படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 13

குமுதினிப்படுகொலையின் 39ஆம்ஆண்டு நினைவேந்தலை நினைவேந்தல் குழுமத்தின் தலைவர் விசுவலிங்கம் ருத்திரன் தலைமையில் நாளை மறுதினம்

11

# விடுதலை கோரும் இனத்தின் சிறகுகள் இழப்புகளால் வலுவிழக்காது

## திருமலையில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை, மே 13

விடுதலை வேண்டிப் போராடும் இனமொன்றின் வேட்கைக்கு, அந்த இனம் எதிர்கொள்ள நேரிடும் இழப்புகள் ஒருபோதும் தடையாக அமையாது என்பதற்கு, ஈழத்தமிழினம்தான் சமகால சாட்சியம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

11

# திருக்கேதீச்சர பெருந்திருவிழா இன்று ஆரம்பம்



மன்னார், மே 13

பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமை வாய்ந்ததும், தேவாரப் பாடல் பெற்றதுமான மன்னார் மாதோட்டம் கௌரி உடனுறைதிருக்கேதீச்சரநாதர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.13 மணி முதல் பிற்பகல்

11

போலிக் கடவுச்சீட்டுடன்

# கனடாவுக்கு பறக்க முயன்றோர் கைது

## யாழ். வாசிகள் இருவர் நீர்கொழும்பில் பிடிபட்டனர்

கொழும்பு, மே 13

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கனடா செல்ல முயன்ற இருவர்

11

நிதி மோசடி:

# மொட்டு அமைப்பாளர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், மே 13

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொதுஜன பெரமுனவின் அமைப்பாளரொருவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுக்

11

# அரசாங்க சேவையில் 2 லட்சம் வெற்றிடங்கள்

கொழும்பு, மே 13

அரசதுறையில் இரண்டு இலட்சம் வெற்றிடங்கள் காணப்படுவதாக அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளதாகவும், இவற்றை

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்டும் வெப்பத்தால் வற்றும் நீர்நிலைகள்!

யாழ்ப்பாணம், மே 13

கடுமையான வறட்சி காரணமாக யாழ். குடாநாட்டில் உள்ள நீர்நிலைகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்து செல்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவித்ததாவது: யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக, மாவட்டம் விரைவான நீர் இழப்பை எதிர்கொண்டு வருகின்றது. இதனால் விவசாய நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தண்ணீரின்றி கால்நடைகளும் அலைந்து திரிகின்றன. இதே நிலை தொடர்ந்தால் தண்ணீர் இழப்பு அதிகரித்து விவசாயத்தைத் தொடரமுடியாத நிலை ஏற்படும் - என்றனர். (ச-17)



## வடக்கில் மிகைவெப்பம்

# கால்நடைகள் தொடர்பில் கூடுதல் கவனம் தேவை!

### துறைசார் மருத்துவர்கள் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், மே 13**


**வடக்கு மாகாணத்தில் இதுவரை வெப்பத்தால் கால்நடை இறப்புகள் எவையும் பதிவு செய்யப்படவில்லை. எனினும் பண்ணையாளர்கள் தமது கால்நடைகள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சிவகுருநாதன் வசீகரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இந்த வெப்பகாலத்தில் என்று மட்டுமல்லாது பொதுவாகவே சில அறிவுறுத்தல்களை நாம் வழங்குகின்றோம். கால்நடைகளை திறந்தால் வெளிமேய்ச்சலுக்காக காலை 9 மணிக்கு முன்னராகவும் மாலையில் 4 மணிக்கு பின்னரே வெளியே கொண்டு செல்ல வேண்டும். மாடுகளுக்கு மேய்ச்சல் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் குறிப்பாக இரவு நேரத்தில் சுத்தமான வாளியில் தண்ணீர் வைக்கவேண்டும்.

நேரடி வெயிலுக்குள் மாடுகளை விடக்கூடாது. குறிப்பாக பால்மாடுகள் தொடர்பில் அவதானமாக செயற்படவேண்டும். ஆனால் பெரும்பாலானோர் காலை 9 மணிக்கு மேய்ச்சலுக்காக கால்நடைகளை கொண்டு சென்று மாலை 4 மணிக்கே மீள பண்ணைக்கு கொண்டு வருகின்றார்கள். இது தவிர்க்கப்படவேண்டும். இதன் காரணமாக மாடுகளுக்கு அதீதமான பாதிப்புகள் மற்றும் உபாதைகள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றன.

கோழி வளர்ப்பாளர்கள் அதிகளவான நீரை கோழிகளுக்கு வழங்க வேண்டும். கோழிக்கூடுகள் மேலே ஓலைகளைப் போட வேண்டும். வெப்பத்தைத் தணிப்பதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-125)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இணுவில் செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை நினைவுகூரும் முகமாக முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கும் நிகழ்வு, இணுவில் கந்தசுவாமி ஆலயத்துக்கருகில் அண்மையில் இடம்பெற்றது. (ப-66)

# பாலைப்பழ சீசன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 13

பாலைப்பழ சீசன் ஆரம்பமாகியுள்ள நிலையில் பெருமளவு பாலைப்பழங்கள் வன்னிப் பகுதியிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு எடுத்துவரப்படுகின்றன. யாழ். நகர் மற்றும் ஏனைய பல இடங்களிலும் அவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது. ஒரு சுண்டு பாலைப்பழம் நூறு ரூபா வரையில் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. (ச-17)

# தேசிக்காய் கிலோ ரூ.1000

யாழ்ப்பாணம், மே 13

யாழ். குடாநாட்டில் தேசிக்காயின் விலை அதிகரித்துள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய வறட்சியான காலநிலையால் தேசிக்காய் வரத்து குறைவடைந்ததையடுத்து இந்த விலையேற்றம் நிகழ்ந்துள்ளது.

திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ தேசிக்காய் ஆயிரம்ரூபாமுதல் ஆயிரத்து200 ரூபாவரையில் விற்பனை செய்யப்படுகிறது. (ச-17)



# மின்னல் தாக்கத்தில் ஒருவருக்குக் காயம்!

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் திடீரென ஏற்பட்ட மழையுடனான காலநிலையின்போது ஒருவர் காயமடைந்துள்ளார்.

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் தென்னைமரமொன்று மின்னல் தாக்குதலுக்கு உட்பட்டுத் தீப்பற்றி எரிந்துள்ளது. யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரிடம் இது தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது. (ம-125)

# ரூ.25 லட்சம் பெறுமதியான முதிரைக்குற்றிகள் மீட்பு!

முல்லைத்தீவு, மே 13

புதுக்குடியிருப்புப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்ட முதிரை மரக்குற்றிகள் அண்மையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலையிலுள்ள அரிவுகாலை ஒன்றில் பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போதே அவை சிக்கின. இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சுமார் ரூ. 25 இலட்சம் பெறுமதியான 100 முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டன. (ச-125)

# பாலைமரத்தை தறிக்க முயற்சித்தோர் கைது!

முல்லைத்தீவு, மே 13

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் பாலை மரத்தை வெட்டமுற்பட்ட குற்றச்சாட்டில் இருவர் வனபரிபாலனத் திணைக்களத்தால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனபரிபாலனத்திணைக்களத்திருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய கடந்த புதன்கிழமை சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-125)

# பேராசிரியர் வித்தியானந்தனின் பங்கு தமிழ்ச் சமூக வளர்ச்சியில் தனித்துவம்!

### பேராசிரியர் ரகுராம் புகழாரம்

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்ச் சமூகம் சார்ந்தும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்ந்தும் மிகப் பெரிய ஆளுமையாளராக விளங்கியவர் பேராசிரியர் வித்தியானந்தன். அவரது பணிகள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவை என்று பேராசிரியர் சி. ரகுராம் புகழாரம் சூட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அருங்காட்சியகத்தில் பேராசிரியர் வித்தியானந்தனின் உருவப்படம் கடந்த புதன்கிழமை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதன்போதே பேராசிரியர் ரகுராம் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்ச் சமூகத்தின் கல்வியியலாளர்கள் வரிசையில் பேராசிரியர் வித்தியானந்தனின் பெயர் தற்போதும் முன்னிலையிலுள்ளது. எங்களின் பாரம்பரிய பண்பாடுகளைப் பேணுவதில் அவருடைய பங்களிப்பு இன்றுவரை நாம் பெருமைப்பட்டுக் கொள்ளுமளவுக்கு காணப்படுகிறது. தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கும் அளப்பரிய பங்களிப்பு நல்கியுள்ள பேராசிரியர் வித்தியானந்தனின் சேவைகள் வரலாற்றில் அழியாத் தடம் பதித்துள்ளன - என்றார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கான பொறிமுறை அரசாங்கமே வகுக்கும்!

## சர்வதேசத்துக்கு இடமில்லையாம் அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டு



**கொழும்பு, மே 13**

**இலங்கையின் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பை சர்வதேசத்துக்கு வழங்கமுடியாது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.**

அவர்மேலும்தெரிவித்ததாவது:- போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் பல உள்ளன. உறவுகளை இழந்த மக்கள் காணாமற்போனோர் அலுவலகத்துக்குச் சென்று தமது உறவுகளைத் தேடித்தருமாறு கோருகின்றனர். அதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். ஆனால், அந்தப் பொறிமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பை சர்வதேசத்துக்கு வழங்கமுடியாது.

நல்லிணக்க பொறிமுறையானது தமிழ் மக்கள் மாத்திரமன்றி சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அந்தப் பொறிமுறையை சர்வதேசத்துக்கு வழங்குவது நடைமுறையில் யதார்த்தமானதல்ல. இந்த விடயத்தில் பக்கச்சார்பாக அன்றி நடுநிலையான தீர்வையே வழங்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்- என்றார். (ச-இ)



# யாழின் அபிவிருத்தி; மீளாய்வுக் கூட்டம்!

யாழ்ப்பாணம், மே 13

யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டங்கள், உலக உணவுத் திட்டம், காணி உரித்துச் சான்றிதழ்கள் வழங்குதல், நலன்புரி நன்மைகள் மற்றும் விவசாய நவீன மயமாக்கல் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக இதன்போது பரிசீலனை செய்யப்பட்டது. (ப-66)

# திருக்கேதீச்சர மஹோற்சவம் யாழிலிருந்து கொடிச்சீலை!


யாழ்ப்பாணம், மே 13



வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று கொடிச்சீலை எடுத்துச் செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கெனடி வீதியிலுள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு, அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்துதிருக்கேதீச்சர ஆலயத்துக்கு கொடிச்சீலை வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்டது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீச்சரத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில் போர்க்காலத்தில் அந்தமுறை கைவிடப்பட்டு, கடந்தவருடம் முதல் மீண்டும் யாழில் இருந்து கொடிச்சீலை அனுப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# 'கோமாதாவை வெட்டாதே' நல்லையில் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், மே 13

பசுக்கள், மாடுகள் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்படும் சட்டவிரோத செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பசுவதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் நேற்றுக்காலை நல்லை ஆதீனம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை சிவசேனை சிவத்தொண்டர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சிவசேனை தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-27,66)

# புதினம் தெரியுமோ?

'அற்றகுளத்து அறுநீர்ப்பறவை' எண்ட சொல்லைக் கேள்விப்பட்டிருப்பியள். மூதுரையில ஔவையார் "தண்ணியில்லாத குளத்தை விட்டிட்டு வேற குளத்துக்கு போற பறவையள்" எண்டு வடிவாச் சொல்லியிருப்பா. எப்பவும் பவரும், பணமும் இருந்தாத்தான் பக்கத்தில நாலைஞ்சு பேர் ஒட்டிக்கொண்டிருப்பினம். இல்லாட்டி எல்லாரும் ஓடிடுவினம். ஆனால் சில இடங்களில இதுக்கு எதிர்மாறாவும் நடக்கும். பவரும், பணமும் இருந்தாலும் கூட ஏனெண்டும் கேக்காத அளவுக்கும் சிலர் இருக்கினம். சிலவேளை அவையள் செய்த முன்வினையளின்ர கர்மத்தால அப்பிடி ஆக்கள் அண்டுகினம் இல்லைப்போல. சரி நீட்டி முழக்காமல் விசயத்துக்கு வருவம்.

இந்தமுறை மேதினத்தை வடமராட்சியில வீணைக்கட்சி நடத்தினது. அங்கையுள்ள கடற்றொழில் அமைப்புகளெல்லாம் தங்கட கட்டுப்பாட்டுக்க இருக்கெண்டு நினைச்சுத்தான் பெருமெடுப்பில அங்க மேதினக் கூட்டத்தை வைப்பம் எண்டு முடிவெடுத்தவையாம். ஆனால், நானூறு, ஐநூறு பேர் வருவினம் எண்டு நினைச்ச கூட்டத்துக்கு நாலைஞ்சு பேர்தான் வந்திருக்கினம். எந்தெந்தச்சங்கமெல்லாம்தங்கட முழுக்கட்டுப்பாட்டுக்க இருக்கெண்டு வீணைக்காரர் கணக்குப் போட்டிச்சினமோ, அந்தச் சங்கங்களில இருந்து ஒருத்தர் கூட வரேலை எண்டதுதான் கடும்பகிடியாம். அடுத்தநாள் எல்லாச் சங்கங்களுக்கும் வீணைக்காரர் போன் பண்ணி, கூட்டத்துக்கு ஏன் வரேலை எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு "அண்டைக்கு தொழிலுக்குப் போற நாள், தொழிலை விட்டிட்டு தொழிலாளர் தினத்துக்கு வந்தால் குடும்பத்துக்கு ஆர் காசு குடுப்பினம்?" எண்டு திருப்பி அந்தக் கடற்றொழில் சங்கக்காரர் கேட்டிருக்கினம். வீணைக்காரரால பதில் சொல்லேலாமல் போட்டுது.

முந்தநாள் பருத்தித்துறையில இருக்கிற ஒரு மண்டபத்தில வீணைக்கார அமைச்சர், அதே கடற்றொழில் சங்கக்காரர், ஆதரவாளர்களைக் கூப்பிட்டுக் கூட்டமொண்டு வைச்சிருக்கிறார். வரப்போற ஜனாதிபதித் தேர்தலில ரணிலை ஆதரிக்கோணும் எண்டு அவைக்கு அமைச்சர் விளங்கப்படுத்தத்தான் அந்தக் கூட்டமாம். ஆனால் மேதினத்துக்கு வராத ஆக்களெல்லாம் இந்தக் கூட்டத்துக்கு வந்திருக்கினம். அண்டைக்கு ஒரு ஈ, காக்கா கூட வரேலை. இந்தமுறை மட்டுமெப்பிடி இப்பிடிச் சனம் வந்தது? எண்டு வீணைக்காரரே தங்கட நெருங்கின வட்டங்களுக்குச் சொல்லி இருக்கினம்.

"அண்டைக்கு அவை தொழிலுக்குப் போனதாலதான் வரேலை எண்டவை. அதால இண்டைக்கு அமைச்சரோட சந்திப்பு இருக்கெண்டு தொழிலுக்குப் போகாமல் 'தொழில் மறிப்பு' செய்தம். அதால அவை தொழில்கிழில் எண்டு சாட்டுச் சொல்லேலாது தானே. எல்லாரும் வந்திட்டினம்" எண்டு தங்கட கெட்டித்தனத்தை தாங்களே சொல்லிக் காட்டிச்சினம். இப்பிடி ஒரு அஞ்சு சதத்துக்கும் பெறுமதியில்லாத கூட்டத்துக்காக, அவ்வளவு கடற்றொழிலாளரும் கடலுக்குப் போகக்கூடாது எண்டு மறிக்கிறது எவ்வளவு பெரிய அநியாயம்? உங்கட கூட்டத்துக்காக அந்தத் தொழிலாளர்களின்ர குடும்பங்கள் உலை வைக்காமல் பசியில துடிக்க வேணுமோ? எல்லாம் எலக்சன் வரைக்கும் தானே உந்தக் கூத்து. பாப்பம், அதுக்குப் பிறகு சனமே உவையளுக்குத் தடை போட்டிடும் கண்டியளோ. அதுக்குப் பிறகு காலம் முழுக்க இவையள் அற்றகுளத்து அறுநீர்ப் பறவையள் தான்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)

சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட துலாம் ராசியில் சித்திரை 3ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்கள் வரும். துலாராசிகாரர்கள் உள்ளொன்று வைத்து வெளியே ஒன்று பேசத்தெரியாதவர்கள். எல்லாருக்கும் தன்னால் என்ன நல்லது செய்ய முடியும் என்று யோசித்து செயற்படுபவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படி அமையும் என்று பார்ப்போம்.




இதுவரை 7 ஆம் வீட்டில் அமர்ந்து பல நல்லபலன்களை வாரி வழங்கிக் கொண்டிருந்த குருபகவான் தற்போது ராசிக்கு 8 ஆம் வீட்டில் சென்று அமர்கிறார். 8 ஆம் வீடான ரிஷபமும் சுக்கிரனின் ராசியே. எனவே அஷ்டம குரு கஷ்டங்கள் தருவாரோ என்கிற பயம் தேவையில்லை.

அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் அதனால் ஆதாயமும் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். அநாவசிய செலவுகள் துரத்தும் என்றாலும் செலவுகளுக்குப் பஞ்சமில்லை.

குருபகவான் 2 ஆம் வீட்டைப் பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும், பணவரவு உண்டு. பணம் வந்தாலும் தங்கவில்லையே என புலம்பினீர்களே! இனி பணப்புழக்கம் அதிகரிக்கும். சேமிக்கவும் செய்வீர்கள். வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்குவீர்கள். பலசிந்தனைகளுடன் தூக்கமில்லாமல் தவித்தீர்களே! இனி ஆழ்ந்த உறக்கம் வரும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
1.5.24 முதல் 12.6.24 வரை உங்களின் பாதகாதிபதியான சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் ஆரோக்கியம் பாதிக்கும். அலைச்சல் அதிகமாகும். சேமிப்புகள் கரையும். சிலர் உங்கள் மீது வீண்பழி சுமத்த முயல்வார்கள்.

12.6.24 முதல் 19.8.24 வரை மற்றும் 2.12.24 முதல் 5.4.25 வரை உங்களின் ஜீவனாதிபதியான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் பதவியுயர்வு உண்டு. சவாலான காரியங்களைக்கூட கச்சிதமாக முடித்துக் காட்டுவீர்கள். வீண்பழி விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**வியாபாரம் :** பற்று வரவு உயரும். குழப்பங்களெல்லாம் நீங்கும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**உத்தியோகம் :** காலநேரம் பார்க்காமல் உழைத்தும் அதற்கான பலனையும், பாராட்டையும் வேறொருவர் தட்டிச் சென்றாரே! இனி திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதுச் சலுகைகள் கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கத்தான் செய்யும். ஒருபுறம் விமர்சனம் இருந்தாலும் மற்றொருபுறம் உங்களின் திறமையால் சாதித்துக் காட்டுவீர்கள்.

**இந்தக் குருப்பெயர்ச்சி மாறுபட்ட அணுகுமுறையால் வெற்றியையும், வாழ்வில் ஒருபடி முன்னேற்றத்தையும் தருவதாக அமையும்.**



## ஆடிவேல் பாதயாத்திரை சந்நிதியிலிருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 13

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக்கந்தனின் ஆடிவேல்விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய மிக நீண்ட பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை உள்ளிட்ட 7 மாவட்டங்களையும் இணைத்து 48 நாள்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்துகடக்கும் புனித பாதயாத்திரையாக இது அமைகிறது.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-131)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி, மே 13

சப்பச்சிமாவடி, பிள்ளையார்கோவில் பெருந்திருவிழா நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது. (ப)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 13

கொக்குவில் கிழக்கு- காட்டுப்புலம் முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுப்பிரமணிய சுவாமிக்கும் வள்ளி, தெய்வானைக்கும் திருக்கல்யாணம் நடைபெற்று, அழகிய பூந்தண்டிகையில் சுவாமி கிராம பிரதக்ஷணம் செய்யவுள்ளார். (ச)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 13

கொழும்புத்துறைமேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 23ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்து செயற்படவேண்டிய நாள். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது. அம்பிகையை வழிபடுவது நலம் சேர்க்கும். பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். காரியங்கள் ஆதாயம் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். செலவுகள் ஏற்படும். மாலையில் எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும். அனுசரித்துச் செல்லவும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபசெய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். தாயாரின் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு கிடைக்கும். இலாபம் எதிர்பார்த்ததைவிட கூடுதலாகக் கிடைக்கும்.

**சிம்மம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வீண் மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பாராத வேலைச்சுமையின் காரணமாக சற்று சோர்வு உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். விநாயகரை வழிபடுவது நன்று.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பக்குவமாகச் சமாளித்து விடுவீர்கள்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சற்று அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனஸ்தாபம் நீங்கும். பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். அனுகூலப் பலன்கள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். வழிபாடு நலம் சேர்க்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும் . உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. செலவுகள் அதிகரிக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**கும்பம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். காரியங்கள் இழுபறியாகும். பேசும்போது பதற்றம் வேண்டாம்.

**மீனம்:** அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு குறையும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். செலவு செய்யவேண்டி வரும். கனிவாக நடந்து கொள்வது அவசியம். சிவபெருமானை வழிபட சிரமங்கள் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ஆத்மத்தில் இருத்தி...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்திருக்கின்றது. முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல், அஞ்சலி நிகழ்வுகள் என தமிழர் தாயகத்தை சோகத்தின் கீதங்கள் கௌவத் தொடங்கியிருக்கின்றன. தமிழர் இதயத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட ஆத்மார்த்தமானதும் மிகக்கனதியானதுமான நாள்களில் தவிர்க்கமுடியாத காலங்கள் இவை. 15 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய நாளில்தான் முள்ளிவாய்க்கால், குருதிச் சகதிக்குள் சின்னாபின்னமானது. தன் சொந்தநாட்டு மக்களையே லட்சக்கணக்கில் கொன்றொழித்த உலகின் மோசமான இழிசெயல் நிகழ்ந்து இன்றுடன் ஆண்டு 15.

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அஞ்சலிப்பு நிகழ்வுகளை வழக்கம்போல், உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பதற்கு அத்தனை ஏற்பாடுகளும் உரிய கட்டமைப்புகள் ஊடாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அஞ்சலிப்புகளையும் முள்ளிவாய்க்கால் நினைவுகளையும் சமூகமயப்படுத்த வேண்டிய, அடுத்த சந்ததிக்கு ஊடுகடத்தவேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கட்சிக்கும், சமூகக் குழுக்களுக்கும், சிவில் சமூகச் செயற்பாட்டுத் தளங்களுக்கும் இருக்கவே செய்கின்றது. இந்த அஞ்சலி நிகழ்வுகள், கிராமங்கள்தோறும் எவ்வளவுக்கு எவ்வளவு விரிவாக்கப்படுகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு நீதிக்கான பாதையை அகலத் திறக்கும். ஆதலால், இந்த வாரத்துக்குரிய தாற்பரியத்தை உணர்ந்து ஆத்மத்தில் இருத்தி செயற்பட வேண்டியது எம் அனைவரினதும் தேசியக் கடமையாகும். அத்துடன், நம்பிக்கையற்ற யாசகனைப் போன்று ஒவ்வொருவருடமும் 'நீதியை மன்றாட்டமாகத் தேடும்' இனக் குழுமமாகத்தான் இந்த அஞ்சலிப்புகளை நாம் மேற்கொள்ளப்போகின்றோமா? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது.

இலங்கையில் இறுதிப்போரின்போது தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். தமிழர்கள்மீதுவகைதொகையின்றி போர்க்குற்றங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன என்று வெளிப்படையாக ஏற்றிருந்தது 'உலக அரசாங்கம்' என்று தன்னை வரைவிலக்கணப்படுத்தியுள்ள ஐ.நா. ஆனால், தமிழர்கள் மீதான இந்தப் படுகொலைகளுக்கு என்ன நீதியை ஐ.நா. வழங்கிவிட்டது? ஒரு தசாப்தம் கடந்த பின்னரும்கூட நீதியை நிலைநாட்டி ஆறாத ரணத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு கொஞ்சமேனும் மருந்திடுவதற்கு என்ன பொறிமுறைகளை ஐ.நா. உருவாக்கியுள்ளது? இறுதிப்போரின்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடுவதைப்போன்று இந்தக் கேள்விகளுக்கான பதில்களையும் தமிழினம் தேடித் தேடிக் களைத்துப்போய்விட்டது.

'உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற விடயங்களுக்கான நீதிப்பொறிமுறையை அரசாங்கமே வகுக்கும்' என்று சிறிலங்கா நாடாளுமன்றத்தில் வைத்து வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்த கருத்தின் பின்புலத்தைக் கூட ஐ.நா. வழங்கிய அளவுகடந்த காலஅவகாசங்களின் நீட்சியாகவே கொள்ளவேண்டியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் இவ்வாரம் இலங்கைக்கு வருகை தரவுள் ளதுடன் அவர், முள்ளிவாய்க்கால்முற்றத்தில்இடம்பெறவுள்ள பொதுநினைவேந்தலிலும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார். சர்வதேச மன்னிப்புச்சபை என்பது ஒரு சிறு அமைப்பல்ல, அதுவொரு 'உலகஸ்தாபனம்'. ஆதலால், அக்னெஸிடம் சில விடயங்களை தம் சொல்லாலும் செயலாலும் ஊடுகடத்த வேண்டிய காலக்கடமை தமிழர் தரப் புக்கு இருக்கவே செய்கின்றது...!




# பரவும் தோல்நோய் சிகிச்சை அவசியம்

**கொழும்பு, மே 13**

**இலங்கையில் இளைஞர்களிடையே தோல்நோய் ஒன்று வேகமாகப் பரவி வருகிறது என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

டினியா எனப்படும் இந்த நோய் பூஞ்சை தொற்றால் பரவுகிறது. இறுக்கமான நைலோன் கலந்த ஆடைகளை அணிகின்றமையே இதற்குக் காரணமாக அமைகிறது என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

டினியா தோல்நோய்க்கு உரிய சிகிச்சை முறைமைகள் காணப்படுகின்றபோதிலும் முறையாக சிகிச்சையளிக்கப்படாமையால் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மந்தநிலையை அடைந்துள்ளன. எனவே இதற்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)



# இலங்கையர்களுக்கு நல்லதே செய்தேன்!

*மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நசீட் தெரிவிப்பு*

கொழும்பு, மே 13

கோத்தாபய இலங்கையில் இருந்து வெளியேற உதவியதன் மூலம் இலங்கையர்களுக்கு நன்மையே செய்தேன் என்று மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நசீட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தாக்கப்பட்டு கொலை செய்யப்படும் ஆபத்து நிலவியதால் அவர் இலங்கையிலிருந்து வெளியேற உதவினேன். அதனூடாக இலங்கை மக்கள் வேறொரு அரசியல் மாற்றத்தை பெற்றுக்கொள்வதற்கு உதவுவதற்கான சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. எனது மனதில் கோத்தாபய ராஜபக்ச பதவி விலகுவதே வேறு எதனையும்விட முக்கியமானதாகக் காணப்பட்டது - என்றார். (ச-இ)



# மிகை வெப்பம்

கொழும்பு, மே 13

8 வருடங்களின் பின்னர் இந்த ஆண்டு இலங்கையின் வெப்பநிலை வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் திலக் விஜயதுங்க பண்டார தெரிவித்துள்ளார். (ச-இ)

# இலங்கை வருகிறார் ரவிசங்கர் குருஜி

கொழும்பு, மே 13



இந்தியாவின் பிரபல ஆன்மீகத் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி இலங்கைக்கு வருகைதரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் இலங்கைக்கு பயணம்மேற்கொள்ளவுள்ள அவர், நுவரெலியா சீதை அம்மன் கோவிலுக்குப் பயணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# போதைக் கடத்தல்காரர் நாட்டிலிருந்து ஓட்டம்!

கொழும்பு, மே 13

'யுக்திய' மற்றும் அதனுடன் தொடர்புபட்ட போதைப்பொருள் ஒழிப்பு திட்டங்களால் பல வருடங்களாக போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த நூற்றுக்கும் அதிகமான பிரதான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் நாட்டைவிட்டு தப்பியோடியுள்ளனர் என்று புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## நாளை

**14.05.2024**

**செவ்வாய்க்கிழமை**

**வைகாசி - 01**

சுபநேரம் : 10.23 - 11.53

ராகுகாலம் : 02.53 - 04.23

## நாளொரு நல்வார்த்தை

**என்னிடம் சிறப்பான தனித்தன்மை என்று எதுவுமே இல்லை.**
**என்னிடம் இருப்பது ஆர்வம் மட்டுமே,**

**- அல்பேர்ட் ஐன்ஸ்டீன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுடன் மோதலா? முடிவு மேற்குநாடுகளிடம்!

## பதவியேற்பு விழாவில் புடின் மறைமுக எச்சரிக்கை



**மொஸ்கோ, மே 13**

**ரஷ்யாவைப் பகைப்பதா, ரஷ்யாவுடன் மோதுவதா அல்லது ரஷ்யாவுடன் நட்புறவில் இருப்பதா என மேற்குலக நாடுகள்தான் தீர்மானிக்கவேண்டும் என்று அதிபர் புடின் அறிவித்துள்ளார்.**

அண்மையில் நடைபெற்ற ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் ஐந்தாவது தடவையாக புடின் ஜனாதிபதியாகத் தெரிவானார். சுமார் 88 வீதமான மக்கள் புடினை ஆதரித்து வாக்களித்திருந்தனர். பதவியேற்பு விழாவில் உரையாற்றும்போதே புடின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'போர் விவகாரத்தில் நியாயமான முறையில் பேச்சுகளை முன்னோக்கிக் கொண்டுசெல்ல மேற்குலகம் விரும்பினால் அதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். மேலும் ரஷ்யாவை வீழ்த்துவதையே நோக்கமாகக் கொள்கிறீர்களா? அல்லது ரஷ்யாவுடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட விரும்புகிறீர்களா? என மேற்குலக நாடுகளே தீர்மானிக்க வேண்டும்'. என்றும் புடின் இதன் போது தெரிவித்துள்ளார்.

புடினின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்கு மேற்கு நாடுகளின் தூதுவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் எவரும் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியத் தேர்தல்களில் அமெ. தலையிடவில்லை

## ரஷ்யாவின் குற்றச்சாட்டை மறுக்கின்றார் பைடன்

வொஷிங்டன், மே 13

இந்தியத் தேர்தலில் அமெரிக்காக தலையிட்டு இந்தியாவை நிலைகுலையச்செய்ய முயற்சிக்கிறது என ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், ரஷ்யாவின் குற்றச்சாட்டுகளை அமெரிக்கா மறுத்துள்ளது.

இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெறும் வேளையில், மதச்சுதந்திர விதிமுறைமீறல் குற்றத்தை சுமத்தி இந்தியாவை அமெரிக்கா நிலைகுலையச் செய்ய முயற்சிக்கிறது என ரஷ்ய வெளிவிவகாரத்துறையின் செய்தித் தொடர்பாளர் ஜகரோவா குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டுகளையே தற்போது அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துள்ளது. "கண்டிப்பாக இல்லை. நாங்கள் இந்திய மக்களவைத் தேர்தலில் மட்டுமல்ல. உலகின் எந்த நாட்டுத் தேர்தல் விடயங்களிலும் தலையிடுவதில்லை. இந்தியாவின் தேர்தல் குறித்து இந்திய மக்களே தீர்மானிக்கவேண்டும்" என்று அமெரிக்காவின் செய்தித் தொடர்பாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார். (ம)

# இஸ்ரேலுக்கு ஆயுதங்களை இனி வழங்கப்போவதில்லை

## அதிபர் பைடன் வெளிப்படை



வொஷிங்டன், மே 13

ராபாவுக்குள் இஸ்ரேலியப் படைகள் தரைவழியாக ஊடுருவியுள்ளதால், இஸ்ரேலுக்கு இதுவரை வழங்கிவந்த பல ஆயுதங்களை அமெரிக்கா இனி வழங்காது என்று அதிபர் பைடன் அறிவித்துள்ளார்.

சுமார் 15 லட்சம் மக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள ராபாவுக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழையக்கூடாது என்று அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால் அமெரிக்காவின் வலியுறுத்தலை இஸ்ரேல் கவனத்தில் கொள்ளவில்லை. ராபாவில் தற்போது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான பின்னணியிலேயே இஸ்ரேலுக்கு இனி ஆயுதங்கள் வழங்கப்படாது என்று பைடன் அறிவித்துள்ளார்.

'இஸ்ரேலைப் பாதுகாப்பதில் அமெரிக்கா அக்கறையுடன் உள்ளது. ஆனால், ராபாவுக்குள் மனிதப் படுகொலைகளை நிகழ்த்துவது இஸ்ரேலைப் பாதுகாப்பது என்றாகாது. ராபாவுக்குள் தரைவழி நடவடிக்கைகள் அவசியமற்றவை. இதை அமெரிக்கா வலியுறுத்துவதுடன் இந்த நிலைப்பாட்டில் உறுதியாகவும் உள்ளது' என்றும் பைடன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# சுனிதா வில்லியம்ஸின் பயணம் மீண்டும் ரத்து

வொஷிங்டன், மே 13

போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்டார்லைனர் எனும் புதிய விண்கலத்தின் மூலம் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முதல் பயணமானது, விண்கலம் ஏவப்படுவதற்கு 2 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஒத்திவைக்கப்பட்டது.

அமெரிக்காவின் பச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் இந்த விண்கலத்தின் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பயணிக்கவிருந்தனர். எனினும், விண்வெளி வீரர்களான பச் வில்மோர், சுனி வில்லியம்ஸ் ஆகியோர் விண்கலத்தில் அவர்களின் ஆசனங்களுடன் இணைக்கப்பட்டிருந்த நிலையில், இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

ஸ்டார்லைனர் விண்கலத்தை விண்வெளிக்கு ஏவுவதற்கான 'அட்லஸ்-5' ரொக்கெட்டின் திரவ ஒட்சிசன் குழாய் வால்வு ஒன்றில் சத்தமொன்று ஏற்படுவதை பொறியியலாளர்கள் அவதானித்ததையடுத்தே, இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டது. (ம)



# ராமர் கோயில் தீர்ப்பை எதிர்க்கும் திட்டமில்லை

## மோடிக்கு காங்கிரஸ் பதிலடி

புதுடில்லி, மே 13

ராமர் கோயில் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் திட்டமில்லை என காங்கிரஸ் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

மத்திய பிரதேசத்தில் நடந்த பேரணியில் பிரதமர் மோடி பேசுகையில், அயோத்தி தீர்ப்பை ரத்துச் செய்ய ராகுல் காந்தி முயல்கிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். இதற்குப் பதில் வழங்கும் விதமாகவே, ராமர் கோயில் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் திட்டமில்லை என காங்கிரஸ் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

ராமர் கோயில் தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பில் காங்கிரஸ் கட்சி உறுதியாக உள்ளது. மத்தியில் இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அதை ரத்துச் செய்யும் திட்டம் எதுவும் இல்லை. தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதில்லை. இந்த விஷயத்தில் நீதிமன்றத்தின் தலையீடு குறித்து முதலில் கேள்வி எழுப்பியது பா.ஜ.க.தான் என்று காங்கிரஸ் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# இஸ்ரேல் சீண்டினால்

## அணுசக்தி கோட்பாடுகளை ஈரான் உடனடியாக மாற்றும்

தெக்ரோன், மே 13

ஈரானின் இருப்பை இஸ்ரேல் தொடர்ந்து சவாலுக்குட்படுத்தினால் ஈரானின் அணுசக்திக் கோட்பாடு உடன் மாற்றப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் அதியுயர் தலைவரான அயதுல்லா அலி கமேனியின் ஆலோசகரும், ஈரானின் போர்த் தந்திரிகளில் ஒருவருமான கர்ராசி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அணுவாயுதங்களை பெற்றுக்கொள்ளுதல் அல்லது போர் நோக்கத்துக்காக உற்பத்தி செய்தல் போன்ற எண்ணம் ஈரானுக்கு இல்லை. எனினும் ஈரானில் அணுவாயுத தொழில்நுட்பங்கள் காணப்படுகின்றன. ஆதலால், இஸ்ரேல் எங்களது இருப்பை அச்சுறுத்தினால் அணுசக்தி கோட்பாடு மாற்றமடையும். அதில் ஈரான் எந்தத் தயக்கத்தையும் காட்டாது என்று கர்ராசி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# கிழக்கு நோக்கி நகர்கிறது பூமி!

பூமி கிழக்கு நோக்கி நகர்வதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

நீரின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்ற நிலையில் பூமியில் இருந்து அதிகபடியான நிலத்தடிநீர் உறிஞ்சப் படுகின்றது. இதனால் கடந்த 20 ஆண்டுகளில் 80 சென்ரிமீற்றர் அளவுக்கு பூமி கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைவேலி மருதடி விநாயகர் மஹோற்சவம் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீர கத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்தத் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றையதினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் மஹோற்சவ குரு சிவஸ்ரீ ராம் சண்முகானந்த குருக்கள், ஆலயகுரு பிரம்மஸ்ரீ ஞான சர்மா கணாதிச சர்மா, சாதகாசிரியர் சிவஸ்ரீ ஜெகதீஸ்வர மயூரக் குருக்கள் ஆகியோர் பங்கேற்புடன் திருவிழா நடைபெறவுள்ளது.


மாவை ஆதீனமும் விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான போஷகருமான மஹாராஜஸ்ரீ மாவை து.ஷ. ரத்தின சபாபதிக் குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளார். (ச)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

இலக்கணப்பிழையின்றி சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில.
ஆசிரியர் - ந.விக்னேஸ்வரன்
ஆச்சார்யார். குபேரன் கட்டட மாடி,
பிரான்பற்று வீதி, சங்கானை.
தொடர்புகளுக்கு: 077 675 1649
(cs 55047) N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 07 . 1977



மறைவு
26 . 04 . 2024

### கனகரத்தினம் புவிசங்கர்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் வில்நெப் சென்ஸ் ஜோன்ஸ்சை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் புவிசங்கர் கடந்த 26.04.2024 அன்று பிரான்சில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - புவனேஸ்வரி தம்பதியரின் இளைய புதல்வனும், திருநாவுக்கரசு - தனலட்சுமி தம்பதியரின் இளைய மருமகனும், அகலிகாவின் அன்புக் கணவரும், அகிஷன், அனனியா, அக்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவிகரன் (இலங்கை), சுஜாதா (சுவிஸ்), யசிந்தா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றஜனி (இலங்கை), காலஞ்சென்ற இரவி மற்றும் சதீஸ்வரன் (இலங்கை), சாருலதா (இலங்கை), பிரகாசினி (பிரான்ஸ்), சுகன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், ஜெயசுதாகரன் (இலங்கை), நியூட்டன் (பிரான்ஸ்), கயலினி (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும், தக்ஷயன், நிகிதா, நினோகா, லுக்சாயினி, டூறிகன், டிவாகன், நிகிஷன், மிகாசன், றிக்சன், றெஸ்மி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், வினுஜன், தனுஷன், சிபிஷன், ரேகிஷன், சுபிக்ஷா, அக்சறா, ஆருஷன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13.05.2024 திங்கட்கிழமை பிற்பகல் 13.15 மணிமுதல் 14.25 மணிவரை 95, Rue Marcel Sembat, 93430 Villetaneuse எனும் முகவரியில் வைக்கப்பட்டு பின்பு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
நியூட்டன் - 0033 661 714 806
சுதா - 0033 602 151931
சுஜாதா - 0041 795 018960

தகவல்:
குடும்பத்தினர் (பிரான்ஸ்)
திருநாவுக்கரசு
செட்டி குறிச்சி, பண்டத்தரிப்பு.
(cs 55031) (N-1)

**மணமகள் தேவை**

றோமன் கத்தோலிக்கம்,
(V) கௌரவ குடும்பம்
அரச உத்தியோகத்திலுள்ள மணமகனுக்கு
மணமகள் தேவை.
தொடர்பு:- 077 140 4701
(CS/55010) J-1


**வீடு வாடகைக்கு**

யாழ் நகர பாடசலைகள், பல்கலைக்கழகத்துக்கு அண்மையாக சுதுமலையில் அறைகள் / முழு வீடு வாடகைக்கு உண்டு. மாணவர், அரசவேலைசெய்வோர், நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
076 789 6016, 074 031 9808
(cs 55040) (N-1)

## இதய அஞ்சலி

### அம்பிகைபாகன் நாகேந்திரன்

(முன்னாள் திட்டப்பணிப்பாளர் மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி)




கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம .
ஆயுட்கால நிர்வாக உறுப்பினர்
அம்பிகைபாகன் நாகேந்திரன் அவர்கள்
இறைபதமடைந்த செய்தி அறிந்தோம்.
எமது ஆழந்த அனுதாபங்களை
தெரிவித்து அன்னாரின் ஆத்ம தில்லை
கூத்தன்சேவடியில் நித்தியபேறுபெற
பிரார்த்திக்கின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும் எமது
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அறங்காவலர்
நிர்வாக சபை உறுப்பினர்கள்,
மகாதேவ ஆச்சிரமம் - கிளிநொச்சி.
(cs 55059 (N-1)

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம்
26 . 08 . 1961



மறைவு
03 . 04 . 2024

அமரர்
### அம்பலவாணர் இரங்கநாதன்
(இளைப்பாறிய அதிபர்)

03.04.2024 அன்று எமது குலவிளக்கு மறைந்த செய்தியைக் கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் துன்பத்தில் பங்குபற்றியோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அஞ்சலி உரை நிகழ்த்திய பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகள் எதிர்வரும் 14.05.2024 செவ்வாய்க்கிழமை காலை 08:30 மணியளவில் "கீரிமலை தீர்த்தக்கரையில்" நடைபெறுவதுடன் வீட்டுக் கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 18.05.2024 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெறும்.

தனிப்பட்ட ரீதியில் அழைப்பை வழங்க முடியாத நிலையிலிருப்பதையிட்டு மனம் வருந்துவதுடன் இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

செட்டி குறிச்சி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.
(CS 475) A-1

## மரண அறிவித்தல்



### அழகேந்திரம் சதீஸ்வரன்

உடுப்பிட்டி பொக்கனை சந்தியைப் பிறப்பிடமாகவும் கிராமக்கோடு ஆதி மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகேந்திரம் சதீஸ்வரன் நேற்று முன்தினம் (11.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - அழகேந்திரம் மற்றும் அழகேந்திரம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் இராமநாதன் - செல்வராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுசிலா சதீஸ்வரன் (வண்ணார்பண்ணை, நூலக உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு கணவரும், மகேஸ்வரன், பகீரதன், மாலதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபாகரன், ஐங்கரன், கிருஸ்ணகுமார், மகேஸ்வரன் பிரதீபா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2024) திங்கட்கிழமை கிராமக்கோடு ஆதிமயிலிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலிட்டி கொட்டுப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
ஐங்கரன் (மைத்துனர்) 077 220 3132
மனைவி - 076 659 8843

## வருடாந்த மஹோற்சவம்

சரவணை, கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம், இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

துன்னாலை, அல்லையம்பதி ஸ்ரீசிவ சுப்பிரமணியர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம், இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேட்டைத் திருவிழா, இரவு சப்பர உற்சவம், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை இரதோற்சவம், மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்த உற்சவம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப-100)



நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**

**வருடாந்த மஹோற்சவம் - 2024**


- **கொடியேற்றம்** - **13.05.2024 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி**
- **தேர்த்திருவிழா** - **22.05.2024 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி**
- **தீர்த்தத்திருவிழா** - **23.05.2024 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி**

முருகன் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**

(cs.55058) (N-1)

## Deepest Condolences



Birth 06.05.1958 — Death 08.05.2024


**Dr. Gerard Robuchon**
(Director,
Alliance Francaise de Jaffna)

The staff and students of the Department of Linguistics & English at the University of Jaffna are deeply saddened by the demise of Dr. Gerard Robuchon who served as Visiting Lecturer in French in our Department. We extend our deepest condolences to the family, friends and students of Dr. Robuchon.

Staff & Students
Department of Linguistics & English
University of Jaffna.

(CS 00486) S-1

## கண்ணீர் அஞ்சலி



எமது பத்திரிகை முகவர்

**அமரர் வேலுப்பிள்ளை விசுவநாதர்**

**(சுமந்திரன் ஸ்டோர்ஸ் உரிமையாளர்)**

அவர்கள் கடந்த (11.05.2024) சனிக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நிர்வாக இயக்குனரும்**
**பணியாளர்களும்.**
**உதயன்**

(CR 5756) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1964 — மறைவு 11 . 05 . 2024



### நடராசா சுதாகரன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வதிவிடமாகவும், செல்வநாயகம் வீதி, வேலணை கிழக்கு 2ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நடராசா சுதாகரன் அவர்கள் நேற்று முன்தினம் (11.05.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - தையல்நாயகி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நடராசா - அம்பலவாணி, கமலேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பவானி அவர்களின் பாசமிகு கணவரும், ரவிந்திரகுமாரி, பங்கஜா, சூரியகலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மாலினி, திருவேரகன் (ஜேர்மனி), கலைவாணி (பிரான்ஸ்), குருபரன் (பிரான்ஸ்), இளந்திரையன், ஜெயவாணி, தியாகரன், காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் மைத்துனரும், கிருபானந்தன் (பிரான்ஸ்), சித்ரா (பிரான்ஸ்), சசிகலா, முகுந்தன் ஆகியோரின் சகலனும், லக்சிகா, கேசிகன் (பிரான்ஸ்), கீர்த்திகன் (பிரான்ஸ்), விதுசன் (பிரான்ஸ்), யதுசன் (பிரான்ஸ்), தனுசன் (பிரான்ஸ்), தனுசா (பிரான்ஸ்), சோபிகா (பிரான்ஸ்), கபிஷன் ஆகியோரின் பெரிய தந்தையும், தியாளினி, சஜீவன், துசாந்தி, பிரசாந், வேணுகா ஆகியோரின் மாமனாரும், அஸ்வின், அஜினன், அக்ஷயன், அபினவன் ஆகியோரின் மாமாவும், பிருந்தா, பிரிதா, பிரஜினா, திவ்யாசினி, லிதுஷன், கவனிஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2024) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**இளந்திரையன் (மச்சான்) 077 715 9690**
**பவானி (மனைவி)**

(CS 00489) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 01 . 1944 — மறைவு 09 . 05 . 2024



### காசிப்பிள்ளை பத்மநாதன்

**(ஓய்வு பெற்ற ஊழியர், நல்லூர் பிரதேச சபை)**

அச்சுவேலி தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை பத்மநாதன் அவர்கள் கடந்த 09.05.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காசிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, மனோன்மணி, கனகமணி, இராசரத்தினம், சிவப்பிரகாசம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், பத்மரூபன் (நல்லூர் பிரதேச சபை), பத்மரூபி (நோர்வே), பத்மநிறஞ்சன் (பிரான்ஸ்), விஜயறஞ்சன் (வவா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜிதா, மயூரதன், சோபினா ஆகியோரின் மாமனாரும், ஹேமானிக்கா, சினேகன் (நோர்வே), கீதன் (நோர்வே), மாதுளன், மதுமிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.05.2024) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மகன் 077 662 1652**

(CS 00487) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்திக்கு டயானாவால் தலையிடி



கொழும்பு, மே 13

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட அனுமதிக்கமாட்டோம் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் டயானா கமகேவின் கணவருமான சேனக டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியை நான்தான் ஸ்தாபித்தேன். அதன்பின்னர் எமது மக்கள் முன்னணிக் கட்சியின் ஸ்தாபகராக இருந்த நான் அந்தப் பொறுப்பிலிருந்து விலகியபின்னர், கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமித்தேன். அப்போது கட்சியின் செயலாளராக இருந்த டயானா கமகே, அந்தப்பதவியிலிருந்து விலகியதையடுத்து, ரஞ்சித் மத்தும பண்டார அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இவை அனைத்துக்குமான எழுத்துபூர்வமான சான்றுகள் உள்ளன. தேவையேற்பட்டால் சஜித் பிரேமதாஸவின் கட்சியின் தலைமைப் பதவியை நாம் கேள்விக்கும் உட்படுத்த முடியும். அந்த வகையில், ஒருபோதும் தொலைபேசி சின்னத்தில் சஜித்தை களமிறங்க இடமளிக்கமாட்டோம் - என்றார். (ச)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
19.01.1952

உதிர்வு
13.04.2024

### நாகராசா மனோராணி

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்களுக்கு நல்வாழ்க்கை அமைத்துக் கொடுத்து இன்று எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விண்ணுலகு சென்ற எம் குடும்பத்தலைவி நாகராசா மனோராணி அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் எமது துயரில் பங்கு கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (13.05.2024) மு.ப 11.30 க்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் றோட், சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(CR 42427) S-1

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினராக நீண்ட காலமாக செயற்பட்டு நிர்வாக செயற்பாடுகளிற்கும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய

**வேலுப்பிள்ளை விசுவநாதர்**

அவரது மறைவு எமக்கு பேரிழப்பாக உள்ளது. அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தோற்றம்
13.05.1947

மறைவு
11.05.2024


நம்பிக்கைப் பொறுப்பாளர், பரிபாலன சபையினர்,
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்,
முதலாய கோயில்கள், கைதடி.

(CS 55060) S-1

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை விசுவநாதர்

(முன்னாள் பிரதேசசபை ஊழியர் - சாவகச்சேரி),
(உரிமையாளர் - சுமித்திரன் ஸ்ரோர்ஸ், கிரிஷ்யா பல்பொருள் அங்காடி)



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விசுவநாதர் நேற்றுமுன்தினம் (11.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவதர்சினி (லண்டன்), சிவரூபன் (கனடா), சிவசுமித்திரன் (லண்டன்), சிவசாந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்தாசன் (லண்டன்), ராஜிகா (கனடா), மலர்மதி (லண்டன்), ரஜீந்திரா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கபிசனா, துசான் (லண்டன்), றபின், கரின், கபின் (கனடா), கிரிஷ்யா, சைலேஷ் (லண்டன்), தசானி, கஸ்வித் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னப்பிள்ளை, கமலாட்சி மற்றும் கதிர்காம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, ஆறுமுகம், சங்கரப்பிள்ளை, சோமசுந்தரம் மற்றும் நாகேஸ்வரி, கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு
13.05.1947

மறைவு
11.05.2024

கைதடி கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்
075 047 6603

(cr.42426) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'மேல ஏறி வாறன் ஒதுங்கி நில்லு'

# 5 தொடர் வெற்றிகளைப்பெற்ற பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்

டில்லி அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்த பெங்களூர் அணி புள்ளிப்பட்டியலில் 5 ஆம் இடத்தைப் பிடித்தது. நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் 5 ஆட்டங்களில் தொடர் வெற்றிகளைப் பெற்றுள்ளது.

பெங்களூரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. பெங்களூர் அதிரடியாக தொடங்கினாலும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கோலி மற்றும் பிளெசிஸ் இருவரும் விரைவாக வெளியேறினர். தொடர்ந்து நுழைந்த படித்தர் மற்றும் வில் ஜக்ஸ் இணை அதிரடியில் வெளுத்துவாங்கியது. போதாக் குறைக்கு டில்லி அணி பல பிடியெடுப்புக் களையும் நழுவவிட்டது. ஒரு கட்டத்தில் 200 ஓட்டங்களுக்கு மேல் பெங்களூர் குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. படித்தர் 32 பந்துகளில் 52 ஓட்டங்களுடனும், ஜக் 29 பந்துகளில் 41 ஓட்டங்களுடனும் வெளியேற பெங்களூரின் ஓட்டவேகம் கட்டுப்படுத்தப்பட்டது. இறுதியில் 9 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலளித்து ஆடிய டில்லி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. வோர்னர் ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். ஜக் பிரேஸரும் 8 பந்துகளில் 23 ஓட்டங்களுடன் துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டாகினார். அதன் பின்னர் மத்திய வரிசையில் அக்ஸர் பட்டேல் மாத்திரம் நம்பிக்கை கொடுக்கும் வகையில் ஆடினார். ஏனையோர் கை கொடுக்காத நிலையில் ஆட்டம் பெங்களூர் வசம் இலகுவாகச் சென்றது. 19.1 பந்துகளில் சகல இலக்குகளையும் இழந்து 140 ஓட்டங்களைப்பெற்றது. (ஒ-5)


## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 13

சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகப் பெருவிழா, இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். (ப-63)

முதியோருக்கான சமூகம்சார் உட்படுத்தல் அபிவிருத்திச் செயற்பாட்டின் ஊடாக, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தால் மருத்துவ அதிகாரிகளுக்கும், தாதியருக்கும் 'முதுமையில் மருத்துவமும் கவனிப்பும்' எனும் தொனிப்பொருளின் கீழ் வதிவிடப் பயிற்சியுடனான கருத்தரங்கு அண்மையில் நடத்தப்பட்டது. (ம-213)





மன்னார் மாவட்டத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பிலும், இன்னும் சில குறைபாடுகள் தொடர்பிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நலன்விரும்பிகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மனுவொன்றையும் கையளித்துள்ளனர். (ப-56)





வட்[illegible]கோட்டை ஸ்ரீ சுப்பிரம[illegible] வித்தியாசாலையில[illegible]யற்பட்டு மகிழ் வே[illegible]ழ்வு அண்மையில[illegible]லை அதிபர் ஜெ.[illegible]சன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யா[illegible]. கிளிநொச்சி மாவட்ட ந[illegible]ளுமன்ற உறுப்பின[illegible] சி.சிறீதரன் பங்கேற்ற[illegible] (8)



மன்னார் மாவட்டத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பிலும், இன்னும் சில குறைபாடுகள் தொடர்பிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நலன் விரும்பிகள் மன்னார் மாவட்டச் செயலரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மனுவொன்றையும் கையளித்துள்ளனர். (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமளவு குண்டுகளுடன் சாட்டியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 13
சாட்டி கடற்கரையில் வெடிமருந்து மற்றும் குண்டுகளுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.
ஆயுதங்களை உடைமையில் வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைவாக சாட்டிக்கு விரைந்த சிறப்பு அதிரடிப்படையினர் 3 கிலோ 145 கிராம் வெடிமருந்து, 8 ஆர்.பி.ஜி. குண்டுகள், 12 மோட்டார் ஷெல்கள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர். மண்கும்பானைச் சேர்ந்த 40 வயதான நபரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். அவர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-125)

# காங்கேசன் – நாகப்பட்டினம் கப்பல் சேவை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 13
காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தவிர்க்க முடியாத சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், கப்பலின் வருகை தாமதமானமையாலும் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இந்தச் சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கப்பல் சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.
இன்றிலிருந்து 16ஆம் திகதி வரையில் கப்பல் சேவைக்குப் பதிவு செய்த பயணிகளை எதிர்வரும் 17ஆம் திகதி பயணத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், 17ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் பயணிக்கமுடியும் எனவும், அவ்வாறில்லாமல் அவர்கள் செலுத்திய கட்டணத்தை முழுமையாக மீளப்பெற விரும்பினால் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-66)

# பொன். சிவகுமாரன் தூபியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 13
உரும்பிராய் மேற்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் வலி சுமந்த முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் உரும்பிராய் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தியாகி பொன். சிவகுமாரன் நினைவுத் தூபியின் முன்பாக இடம்பெறவுள்ளது. (ஒ-66)

## வெப்பத்தால் உயிரிழந்த
# முதியவரின் உடலை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13
அதிக வெப்பம் காரணமாக உயிரிழந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உள்ள உடலத்தை உறவினர்கள் பொறுப்பேற்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.
அருவித்தோட்டம், அல்வாய் கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் கோகுலசிங்கம் (வயது - 68) என்பவரது சடலத்தை அவரின் உறவினர்கள் பொறுப்பேற்கும் மாறும், தொடர்ந்து குளிரூட்டியில் வைக்க முடியாத பட்சத்தில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ-100)

## அரசாங்க...

நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
"ஆசிரிய சேவையில் 40 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. உரிய பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் பாடசாலைகளை மூடவேண்டிய சூழ்நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது.
தாதிய துறையில் 83 ஆயிரம் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகள் இருந்தும் 40 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. சில மருத்துவமனைகளில் தாதியர்கள் 24 மணி நேரம் கடமையாற்றுகின்றனர். இது சுகாதாரத்துறையின் சேவையிலும், தாதியர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
ரயில் சேவையில் 6 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பொறியியல் தொழில்நுட்பவியலாளர்கள், உதவியாளர்கள் போன்ற பல்வேறு துறைகளில் ஆளணிப்பற்றாக்குறை காணப்படுகிறது. இதனால் ரயில் சேவை அடிக்கடி தடைப்படுகிறது.
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்க முடியாது. ஆனால், உரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாவிட்டால் உரிய மக்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கமுடியாது" எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

## விடுதலை...

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் - ஈச்சிலம்பற்று பிரதேச மக்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று, வெருகல் சீனன்வெளியில் நேற்று நடைபெற்றது.
முள்ளிவாய்க்கால் வாரத்தை நினைவுகூரும் வகையில், முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற இக்கலந்துரையாடலில், மக்கள் முன் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சர்வதேசம் பார்த்திருக்க, எங்கள் இனத்தின் மீது வலிந்து புரியப்பட்ட இனப்படுகொலைதான் இந்த நூற்றாண்டின் ஆகப்பெரும் மனிதப்பேரவலம். அந்த அவலத்தின் விளிம்பில் எங்கள் இனத்தின் ஆயுதரீதியான ஆத்மபலத்தை இழந்தபோதும், விடுதலை குறித்த எங்கள் பயணத்தின் வீரியம் இன்னும் குறைந்துவிடவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தை அடுத்தகட்டம் நோக்கி நகர்த்துவதற்கான உந்துதலை, இறந்த எம் உறவுகளின் ஆத்மாக்களே தருகின்றன - என்றார்.
கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் சண்முகம் குகதாசன் உட்பட பலர் பங்கேற்றனர். (ஒ-இ)

## மொட்டு...

கைது செய்யப்பட்டார்.
யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.
9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து பொதுஜன பெரமுனவின் தீவக அமைப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ஒ-66-125)

## தமிழாராய்ச்சி...

முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து பொதுச்சுடர் முன்னாள் போராளியும் முன்னாள் உபதவிசாளருமான விஜயனால் ஏற்றிவைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.
முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழினப் படுகொலையை அடையாளப்படுத்தும்
முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி யாழ். நகரிலிருந்து ஆரம்பமானது. ஊர்தி பயணிக்கும் இடம் முழுவதும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும், அதன் வரலாற்றை [illegible] கையும் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் பாலசந்திரன், வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், முன்னாள் உப தவிசாளர் விஜயன், வட்டுக்கோட்டைத் தொகுதி மகளிர் அணித் தலைவி ஜெயரஞ்சி, பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
இன்று திங்கட்கிழமை தென்மராட்சியில் ஊர்திப் பவனி வலம் வரவுள்ளது. (அ-ஒ-125)

## திருக்கேதீச்சர...

12.21 மணி வரையுள்ள கடக லக்கின சுபவேளையில்
திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் பகல், இரவுத் திருவிழாக்களாக இவ் ஆலய பெருந்திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை பிச்சாடனர் திருவிழாவும், 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கல்யாணத் திருவிழாவும், இரவு தண்டிகைத் திருவிழாவும், 20ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பக்தோற்சவத் திருவிழாவும், 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருத்தேர் வீதி உலாத் திருவிழாவும், 22ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், இரவு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறுமென ஆலயத் திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-66)

## நீதிமன்றத்...

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.
இதன்போது அங்கிருந்தோர் பொலிஸாரால் வழங்கப்பட்ட நீதிமன்ற தடையுத்தரவைப் பெறுவதற்கு மறுத்ததோடு, வேறு யாரையும் நாம் நினைவுகூரவில்லை, உயிரிழந்த எமது மக்களுக்காகவே இதனைச் செய்கின்றோம் என பொலிஸாரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் [illegible] நிலவியது. [illegible] நேர வாக்குவாதத்தின் பின்னர் பொலிஸார் அங்கிருந்து வெளியேறினர்.
இதேவேளை - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட உபசெயலர் நேற்றிரவு சிறிலங்கா பொலிஸாரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-இ)

## குமுதினிப்...

புதன்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்களில் இறந்த உறவுகளின் ஆத்ம சாந்தி வழிபாடுகள் இடம்பெறுவதோடு, காலை 8.30 மணிக்கு நினைவேந்தல் தூபியில் நினைவேந்தல் நிகழ்வும், அந்த நினைவுகளைச் சுமந்து வரும் பசுந்தீவு ருத்திரன் எழுதிய 'உப்புக் கடலை உரசிய நினைவுகள்' எனும் கவிநூலும் வெளியிடப்படுவதோடு, முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்படும் என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ஒ-125)


## கனடாவுக்கு...

கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதையடுத்து, சந்தேகநபர்களுக்கு போலிக் கடவுச்சீட்டு தயாரித்து வழங்கிய யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இருவர் நீர்கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-இ)

## முள்ளிவாய்க்கால்...

வழங்கல் இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நகரசபை பொங்கு தமிழ் நினைவுத் தூபி முன்பாக நேற்று வழங்கிவைக்கப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பிரதேசத்திலும், யாழ்ப்பாணத்தில் நெல்லியடி மற்றும் யாழ். நகரிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது. (ஒ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிளேஓப் வாய்ப்பை தக்கவைத்த சென்னை

**ராஜஸ்தான் அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற சென்னை அணி பிளே ஓப் வாய்ப்பை தக்க வைத்தது.**

சென்னையில் நடைபெற்ற நேற்றைய ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணிக்கு அதிரடி நேற்று வாய்க்கவில்லை. ரியன் பராக் 35 பந்துகளில் 47 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் சிமர்ஜீர் சிங் 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றி ராஜஸ்தானை 141 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினார்.

இலகுவான வெற்றியிலக்கை விரட்டிய சென்னை வழமைபோன்று தடுமாற்றத்துடன் வெற்றியிலக்கை 5 இலக்குகளை இழந்து 10 பந்துகள் மீதமிருக்கை யில் அடைந்தது. சென்னை சார்பில் அணித்தலைவர் ருத்ராஜ் ஹெக்வாட் 41 பந்துகளில் 42 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் சென்னை அணியின் பிளேஓப் வாய்ப்பு தக்கவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி பெங்களூருடனான ஆட்டத்தின் அடிப்படையிலேயே சென்னை பிளேஓப் சுற்றுக்கு தகுதி பெறுமா என்பது தீர்மானிக்கப்படும். (ஒ-5)

# இலங்கை வருகின்றார் அமெ. உதவிச்செயலர்

கொழும்பு,மே 13

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணைச் செயலர் டொனால்ட் லூ இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார். மே 10 முதல் 15 வரை இந்தியா மற்றும் பங்களாதேஷுக்கான தனது பயணத்துடன் அவர் இலங்கைக்கும் வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின் றது. அவரது ஆசியப் பயணம் ஆசிய நாடுகளிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், சுதந்திர மான, திறந்த மற்றும் வளமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்க ஆதரவை நிரூபிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/54971) J-1

074 173 7684

## தொழிலாளர் தேவை

கீரிமலை, சேந்தான்குளம் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள் தேவை. மதிய உணவுடன் சம்பளம் 1500/-

(CS/483) N-1

தொடர்பு:- 077 760 8528

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை **15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம்** வரை
- தரகர் தேவையில்லை.

(CS/375) J-1

தொடர்பு :- 077 886 2927

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட் றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல், உணவு பரிமாறுதல் போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

(CR 42430) S-1

077 649 1027

## விற்பனைக்கு

பப்பாசிக் கன்று (ரெட் லேடி)

(CR 42429) S-1

தொடர்பு:- 077 507 0473

# மரண அறிவித்தல்



## செல்வராசா பாலசுப்பிரமணியம்
### (ரஞ்சன்)
### (சிவன் ஸ்ரோஸ் அரிசிக்கடை உரிமையாளர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா பாலசுப்பிரமணியம் (ரஞ்சன்) (சிவன் ஸ்ரோஸ் அரிசிக்கடை உரிமையாளர்) கடந்த 10.05.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா- இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சோமசேகரம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராவின் பாசமிகு அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (கனடா), கவிதா, காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரன், கமலேஸ்வரன், கரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரனின் (பாஸ்), அன்பு மாமனாரும், அருளானந்தம் (முன்னாள் குமரன் புடைவையகம் - கிளிநொச்சி), காலஞ்சென்ற சிவகுமார் (முன்னாள் கிளிநொச்சி குமரன் புடைவையகம்), மணிமேகலை (சாந்தா), உமாதேவி (தமிழ்கங்கை வாணிபம் - கிளிநொச்சி), சிவசோதி (முன்னாள் குமரன் ஹாட்வெயர் - கிளிநொச்சி), நடராசா (கனடா) சோனாதிராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரன், ஞானேஸ்வரன், காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் தனலட்சுமி (சோலை நகர் கிளிநொச்சி), கமலாம்பிகை (களபூமி), சர்குணதேவி (சோலைநகர் கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசிகரன் (மாணவன் - யா/ காரைநகர் இந்துகல்லூரி), பானுயா (மாணவி - யா / காரைநகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2024) திங்கட்கிழமை புதுறோட் காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 12.30 மணியளவில் ஆலங்கன்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுறோட்,**
**காரைநகர்**
**077 802 3740**
**076 188 1840 - சேனாதிராசா (ஆனந்தி)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 55056) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.